செ. வெ. எண் :- 762 நாள் :- 19-12-2011

# பத்திரிகை செய்தி

## மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் ஆய்வுக் கூட்டம்

நகர்ப்புர மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், நிலையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் அல்லும் பகலும் அயராது உழைக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளுக்கென ரூ.500 கோடி மதிப்பீட்டிலான "பெருநகர் வளர்ச்சித் திட்டம்" மற்றும் பிற மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கென ரூ.750 கோடி மதிப்பீட்டிலான "ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்" ஆகிய இரண்டு சிறப்புத் திட்டங்களையும், மற்றும் ரூ.200 கோடி மதிப்பீட்டிலான "நகர்ப்புர சாலைகள் கட்டமைப்பு திட்டத்தினையும்" செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டங்களுடன், ரூ.6648 கோடி மதிப்பீட்டிலான ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம், ரூ.1414 கோடி மதிப்பீட்டிலான தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி திட்டம் ரூ.839 கோடி மதிப்பீட்டிலான வெளிநாட்டு நிதியுதவி நிறுவனங்களான ஜெர்மன் வளர்ச்சி வங்கி மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியம் மற்றும் பல்வேறு நிதியுதவிகளுடன், நகர்ப்புர மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில், குடிநீர் திட்டப்பணிகள், பாதாளச் சாக்கடைத் திட்டங்கள், சாலை வசதிகள், பேருந்து நிலையங்களை, திடக்கழிவு மேலாண்மை, பள்ளிக் கட்டடங்கள் தெரு விளக்குகள், மழைநீர் வடிகால்கள் போன்ற உள்கட்டமைப்புத் திட்டப்பணிகள் மற்றும் அடிப்படை

வசதிகளை மேம்படுத்துத் வகையில் பல்வேறு பணிகள் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி திட்டங்களை உரிய காலத்தில் முடித்து, அதன் பலன்கள் முழுமையாக மக்களைச் சென்றடைய செய்யும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைப்படி, இன்று (19.11.2011) மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

மேற்படி ஆய்வுக் கூட்டத்தில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மாநகராட்சி ஆணையர், பேரூராட்சிகளின் இயக்குநர், மேலாண்மை இயக்குநர், அனைத்து மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் மற்றும் இதர உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாய்வுக் கூட்டத்தின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, தொலைநோக்குப் பார்வையுடன் அயராது உழைக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் எதிர்பார்ப்பினை நிறைவேற்றும் வகையில், மேற்படி பணிகளை விரைந்து முடித்து, நகர்ப்புர மக்களின் அடிப்படை வசதிகளை எந்தவிதத் தொய்வுமின்றி குறிப்பிட்ட கால வரையறுக்குள் விரைந்து செயல்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கினார்கள்.

***வெளியீடு, இயக்குநர்.***
***செய்தி, மக்கள் தொடர்புத் துறை***
***சென்னை***

19 டிச 2011

Private Personal Assistant
Minister for Municipal Administration
and Rural Development
Secretariat, Chennai 600 009